# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 8389 / 2010 / எம்சி. 8 நாள் : 2.9.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 3.09.2010 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற அவசரக் கூட்டம்

## செப்டம்பர் 2010

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | பொறியியல் பிரிவு - சாலை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதல் - சாலைகளை தெரிவு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | Jnnurm - பில்லூர் 2ம் குடிநீர் திட்டம் - வெள்ளியங்காடு சுத்திகரிப்பு நிலையத்திற்கு மின் இணைப்பு பெறுதல் - முன்வைப்புத்தொகை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை விற்பனை செய்தல் - துணை விதிகள் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 4 | பணியமைப்பு - டெக்ஸ்கோ ஓட்டுநர்களுக்கு 01.04.2010 முதல் 31.03.2011 முடிய ஓராண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்ட அகவிலைப்படி உயர்வு வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

அ) **திருக்குறள்**

**கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையிற் பீடுடைய தில்.**

**(குறள் 1021)**

**விளக்கம்**

**உரிய கடமையைச் செய்வதில் சோர்வு காணாமல் எவனொருவன் முயற்சிகளை விடாமல் மேற்கொள்கிறானோ அந்தப் பெருமைக்கு மேலாக வேறொரு பெருமை கிடையாது.**

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – சாலை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதல் - சாலைகளை தெரிவு செய்தல் - நிர்வாக அனுமதி வழங்குதல் - தொடர்பாக

---------------------

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடை குழாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி சாலைகளில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றவுடன் சாலைகளை புதுப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும், நகரில் உள்ள பழுதடைந்துள்ள ஏனைய பிரதான சாலைகளை புதுப்பிக்கவும், தேவையான இடங்களில் வடிகால் அமைக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

| வ. எண் | வார்டு எண் | சாலையின் பெயர் / லேஅவுட் | சாலையின் நீளம் கி.மீ | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | 28 | காளிங்கராயன் வீதி மற்றும் பிள்ளையார் கோவில் வீதி சிமெண்ட்சாலை | 0.286 | 8.80 |
| 2. | 28 | ராமர் கோவில் வீதி சிமெண்ட் சாலை | 0.447 | 25.25 |
| 3. | 12 | ஸ்ரீபதி நகர் - தார்சாலை | 1.028 | 18.25 |
| 4. | 28 | நாகப்பன் செட்டியார் வீதி சிமெண்ட் சாலை | 0.090 | 2.45 |
| 5. | 28 | தபேதார் வீதி சிமெண்ட் சாலை | 0.225 | 6.30 |
| 6. | 28 | சாஸ்திரி சாலை - தார்சாலை | 0.739 | 27.50 |
| 7. | 40 | வென்னல் நாயுடு வீதி 1,2 சிமெண்ட் சாலை | 0.159 | 4.70 |
| 8. | 41 | எல்.ஜி.தோட்டம் சிமெண்ட் சாலை | 0.458 | 5.75 |
| 9. | 28 | காளிதாஸ் சாலைக்கு தார்சாலை | 0.576 | 12.50 |
| 10. | 43 | திருவள்ளுவர் நகர் சிமெண்ட் சாலை | 0.084 | 1.30 |
| 11. | 47 | கிருஷ்ணப்பன் சந்து சிமெண்ட் சாலை | 0.104 | 2.10 |
| 12. | 28 | சத்தியமூர்த்தி சாலைக்கு தார்சாலை | 0.690 | 19.50 |
| 13. | 47 | கங்குவார் வீதிக்கு சிமெண்ட் சாலை | 0.197 | 2.50 |
| 14. | 41 | ராமர் கோவில் வீதியில் கனி ராவுத்தர் வீதி முதல் பட்டகார் அய்யாசாமி கோவில் வீதி சந்திப்பு வரை சிமெண்ட் சாலை | 0.190 | 3.90 |
| 15. | 13 | சுசீலா நகர் (எஸ்.எஸ். லே அவுட் மற்றும் ஸ்ரீவள்ளி நகர் விரிவு) தார்சாலை | 0.983 | 15.00 |
| 16. | 18 | சரோஜினி வீதியில் 3 குறுக்கு சாலைகள் மற்றும் நந்த கோபால் வீதி. 1 பிரதான சாலை மற்றும் 3 குறுக்கு சாலைகளுக்கு சிமெண்ட் சாலை | 0.739 | 12.15 |
| 17. | 22 & 24 | பெரியார் நகர், நேருநகர் மற்றும் ராமலிங்க ஜோதி நகருக்கு சிமெண்ட் சாலை | 0.607 | 7.45 |
| 18. | 28 | செங்குப்தா வீதிக்கு தார்சாலை | 0.294 | 9.00 |
| 19. | 60 | கட்டபொம்மன் வீதிக்கு சிமெண்ட் சாலை (பேவர் பிளாக்) | 0.345 | 19.21 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | 37 | சி.எம்.சி காலனி - தார்சாலை | 0.425 | 6.00 |
| 21. | 23 | கிருஷ்ணசாமி நகர் 50’0” சாலைக்கு தார்சாலை | 0.690 | 52.50 |
| 22. | 25 | திருச்சி சாலை முதல் பைபாஸ் சாலை வரை தார்சாலை | 0.653 | 26.00 |
| 23. | 28 | காளப்பன் வீதிக்கு தார்சாலை | 0.191 | 1.35 |
| 24. | 28 | விவேகானந்தர் வீதி குறுக்கு சாலைக்கு தார்சாலை (மைதானத்திற்கு எதிர்புறம்) | 0.069 | 2.25 |
| 25. | 28 | சரோஜினி சாலைக்கு தார்சாலை | 0.210 | 2.75 |
| 26. | 40 | லட்சுமி நாயக்கர் மற்றும் பெருமாள் கோவில் வீதி சாலைக்கு தார்சாலை | 0.593 | 14.00 |
| 27. | 27 | கடலக்கார சந்து - தார்சாலை | 0.689 | 4.60 |
| 28. | 27 | சோமசுந்தர மில் மற்றும் காளிஸ்வரா மில் - தார்சாலை | 0.621 | 15.00 |
| 29. | 41 | ராஜீ செட்டியார் மற்றும் பட்டக் காரையாசாமி கோவில் சாலைக்கு தார்சாலை | 0.387 | 18.75 |
| 30. | 41 | சிலேட்டர் ஹவுஸ் சாலைக்கு தார்சாலை | 0.417 | 16.00 |
| 31. | 41 | அய்யாசாமி கோவில் வீதி க்கு தார்சாலை | 0.406 | 18.50 |
| 32. | 41 | ராமர் கோவில் வீதிக்கு தார்சாலை | 0.215 | 11.30 |
| 33. | 41 | கோவர்த்தனா சாலைக்கு தார்சாலை | 0.146 | 4.00 |
| 34. | 41 | லட்சுமி தியேட்டர் சாலைக்கு தார்சாலை | 0.267 | 11.25 |
| 35. | 41 | ரங்கே கவுண்டர் வீதி மற்றும் கனிராவுத்தர் தார்சாலை | 0.453 | 16.50 |
| 36. | 42 | அசோக் நகருக்கு (சுபாஸ் லே அவுட், அபிராமி நகர், கன்னிகா அவென்யூ, சாவித்திரி நகர்) தார்சாலை | 0.572 | 12.00 |
| 37. | 44 | தெலுங்கு வீதி மற்றும் ராஜ வீதிக்கு தார்சாலை | 0.614 | 21.75 |
| 38. | 45 | தாமஸ் வீதிக்கு தார்சாலை | 0.798 | 29.00 |
| 39. | 45 | ரங்கே கவுண்டர் வீதிக்கு தார்சாலை | 0.596 | 26.00 |
| 40. | 6 | கோத்தாரி நகர் பிரதான சாலை 24 குறுக்கு சாலைக்கு தார்சாலை | 2.40 | 67.00 |
| 41. | 14 | ராஜீவ் காந்தி நகர் பிரதான சாலை மற்றும் 20 குறுக்கு சாலைக்கு தார்சாலை | 2.655 | 73.50 |
| 42. | 14 | மீனா எஸ்டேட் பிரதான சாலை மற்றும் 21 குறுக்கு சாலைக்கு தார்சாலை | 3.295 | 74.50 |
| 43. | 19 | பொன்னி நகர் 5 குறுக்கு சாலைகள், ஸ்ரீராம் அவின்யூ 3 குறுக்கு சாலைகள், ஜெயசிம்மபுரம் 5 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை | 1.647 | 52.00 |
| 44. | 22 | பெரியார் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைளுக்கு தார்சாலை | 2.490 | 74.90 |
| 45. | 23 | நாகப்பன் வீதி பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை, சண்முகம் வீதி பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைக்கு தார்சாலை | 0.990 | 20.60 |
| 46. | 23 | கிருஷ்ணசாமி நகர் பிரதான சாலை மற்றும் 4 குறுக்கு சாலைகள், விநாயகர் கோயில் குறுக்கு வீதிகளுக்கு தார்சாலை | 2.050 | 54.55 |
| 47. | 24 | கன்னிகா பரமேஸ்வரி லே அவுட் மற்றும் முருகன் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை | 0.590 | 16.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 48. | 24 | நேரு நகர் 4 குறுக்கு சாலைகள் மற்றும் பசும்பொன் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை | 0.600 | 13.35 |
| 49. | 24 | ராமலிங்க ஜோதி நகர் பிரதான சாலை மற்றும் 6 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை | 1.280 | 37.80 |
| 50. | 20 | நேதாஜி சாலையில் அவினாசி சாலை முதல் புதிய திட்ட சாலை வரை தார்சாலை | 0.391 | 18.20 |
| 51. | 65 | சபரிகார்டன் 1 முதல் 9 சாலைகள் மற்றும் சீர்யாஸ் நகர் சாலை 1 முதல் 3 சாலைகள் வரை தார்சாலை | 1.318 | 23.29 |
| 52. | 65 | அருணா நகர் பிரதான சாலை மற்றும் 4 குறுக்கு சாலைகள் மற்றும் ஓம் நகர் வீதி எண் 1 மற்றும் 2க்கு தார்சாலை | 0.740 | 13.84 |
| 53. | 70 | கணேஷ் லே அவுட்டில் சாலைகள் 1 முதல் 9 வரை மற்றும் ஹரிபிரியா நகர் சாலைக்கு தார்சாலை | 2.084 | 35.98 |
| 54. | 71 | மூகாம்பிகை நகர் பிரதானசாலை மற்றும் 5 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை | 1.135 | 22.29 |
| 55. | 71 | பூந்தோட்டம் 3 பிரதான சாலைகள் மற்றும் 4 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை | 0.956 | 19.33 |
| 56. | 72 | ரங்கா நகர் பிரதான சாலை 1க்கு தார்சாலை | 0.158 | 3.63 |
| 57. | 72 | ராக்காச்சி கார்டன் பிரதான சாலை 1 மற்றும் 13 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை | 0.985 | 19.71 |
| 58. | 72 | பிருந்தாவன் கார்டன் பிரதான சாலை மற்றும் 4 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை | 0.426 | 9.09 |
| 59. | 72 | ஸ்ரீ லட்சுமி நகர் பிரதான சாலை மற்றும் 9 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 1.210 | 61.42 |
| 60. | 72 | அலமேலு மங்கா புரம் மற்றும் விரிவு மனைப்பிரிவில் 1 பிரதான சாலை மற்றும் 8 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 1.020 | 42.82 |
| 61. | 72 | ஸ்ரீதேவி நகர் மற்றும் விஸ்தரிப்பு மனைப்பிரிவு 2 பிரதான சாலைகள் 9 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 1.370 | 59.79 |
| 62. | 31 | டாடாபாத் 10வது வீதி மற்றும் 11 வது வீதி பிரதான சாலை மற்றும் 1 குறுக்கு சாலைளுக்கு தார்சாலை | 1.030 | 51.75 |
| 63. | 32 | இச்சிபட்டி காலனி 7 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை | 0.420 | 14.10 |
| 64. | 32 | கொண்டசாமி லே அவுட் 1 பிரதான சாலை மற்றும் 3 குறுக்கு சாலைகளுக்கு தார்சாலை | 0.330 | 10.30 |
| 65. | 48 | மாகாளியம்மன் கோவில் வீதி மற்றும் தியாகி குமரன் வீதிக்கு தார்சாலை | 0.316 | 13.26 |
| 66. | 48 | செயின்ட் முனுசாமி சாலைக்கு தார்சாலை | 0.295 | 13.97 |
| 67. | 52 | கிருஷ்ணன் வீதிக்கு தார்சாலை | 0.220 | 8.92 |
| 68. | 52 | பொன்னைய்யா ராஜபுரத்திற்கு தார்சாலை | 0.363 | 15.95 |
| 69. | 52 | ராஜம்மாள் லே-அவுட்டிற்கு தார்சாலை | 0.320 | 13.15 |
| 70. | 55 | சாஸ்தா நகருக்கு தார்சாலை | 0.578 | 14.20 |
| 71. | 55 | சுப்பிரமணிய உடையார் வீதிக்கு தார்சாலை | 1.665 | 59.98 |
| 72. | 56 | கருப்பண்ணன் பாதை (எஸ்.பி.ஓ.ஏ. ஸ்கூல்)க்கு தார்சாலை | 0.562 | 40.50 |
| 73. | 57 | கோகுலம் காலனி வீதி 1 முதல் 8 வரையுள்ள பகுதிக்கு தார்சாலை | 2.418 | 64.25 |
| 74. | 58 | சுகர்கேன் பிரதான சாலைக்கு தார்சாலை | 1.230 | 55.95 |
| 75. | 59 | ராதிகா அவென்யூ பகுதிக்கு தார்சாலை | 0.317 | 6.95 |
| 76. | 59 | விவேகானந்தா சாலை 1 மற்றும் 2 வரையுள்ள பகுதிக்கு தார்சாலை | 0.475 | 16.13 |
| 77. | 59 | ஐஸ்வர்யா நகருக்கு தார்சாலை | 0.332 | 9.20 |
| 78. | 59 | தியாகிகுமரன் வீதிக்கு தார்சாலை | 0.350 | 15.28 |
| 79. | 60 | டாக்டர் அம்பேத்கார் வீதிக்கு தார்சாலை | 0.791 | 16.31 |
| 80. | 60 | மருதகோனார் வீதிக்கு தார்சாலை | 0.600 | 12.51 |
| 81. | 63 | அழகண்ணன் வீதிக்கு தார்சாலை | 0.512 | 10.70 |
| 82. | 63 | கவுண்டப்பன் வீதிக்கு தார்சாலை | 0.499 | 12.30 |
| 83. | 63 | பாலசுப்ரமனியன் வீதிக்கு தார்சாலை | 0.876 | 26.75 |

| | | | | |
|---|---|---|---|---|
| 84. | 63 | காமராஜ் சாலைக்கு தார்சாலை | 0.728 | 16.25 |
| 85. | 62 | சி.எஸ். ரத்தினசபாபதி வீதிக்கு தார்சாலை | 0.489 | 12.85 |
| 86. | 51 | மேற்கு அருணாசலம் வீதிக்கு தார்சாலை | 0.375 | 14.92 |
| 87. | 50 | ராமசாமி லே அவுட்க்கு தார்சாலை | 0.203 | 8.11 |
| 88. | 53 | வடக்குஹவுசிங் யூனிட் சாலைக்கு தார்சாலை | 2.908 | 42.30 |
| 89. | 56 | முத்தண்ணன் குளச்சாலைக்கு தார்சாலை | 0.780 | 74.98 |
| 90. | 27 | ஆடிஸ் வீதி கிரேடவுன் சாலை மற்றும் முனுசாமி கார்டன் சாலைக்கு தார்சாலை | 1.125 | 20.65 |
| 91. | 40 | பேலஸ் தியேட்டர், பழைய மார்கெட், ராமசாமி வீதி சாலைக்கு தார்சாலை | 0.615 | 5.60 |
| 92. | 28 | பட்டேல் சாலைக்கு தார்சாலை | 0.330 | 10.40 |
| மொத்த மதிப்பீடு | | | 69.095 | 2035.37 |

எனவே மேற்படி சாலைகளை புதுப்பிக்க ரூ 2035.37 /- இலட்சத்திற்கு சிறப்பு சாலை திட்டம் 2010ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை கோரவும், மாமன்றத்தின் பரிந்துரைக்கும் மற்றும் மேற்காண் பணிகளுக்கு நிர்வாக அனுமதிக்கும் வேண்டி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண் : 8230/2010/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 98 நாள் 03.09.10**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சி பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பணியான வெள்ளியங்காடு பகுதியில் 125 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மெஸ்ஸர்ஸ் கிர்லோஸ்கர் அண்டு பிரதர்ஸ் நிறுவனம், புனே என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

நீர் சுத்திகரிப்பு நிலையம் இயங்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் இணைப்பு வேண்டி கடந்த 15.06.2010–ம் தேதியன்று விண்ணப்பிக்கப்பட்டது. மருதூர் 110/22 KV உப நிலையத்திலிருந்து வழங்கப்படும் உயர் அழுத்த மின் இணைப்பு, அதிகபட்ச உயர் அழுத்த மின் அளவு 3000 KVA வழங்க கண்காணிப்புப் பொறியாளர், மின்சார வாரியம்(வடக்கு), கோவை அவர்கள் 1 KVA–விற்கு ரூ. 800 வீதம் 3000 KVA அளவு மின்சார இணைப்பு பெறுவதற்கு முன் வைப்புத் தொகையாக ரூ. 24,00,000 மற்றும் பதிவுக் கட்டணம் ரூ. 500 சேர்த்து ஆக மொத்தம் ரூ. 24,00,500/–ஐ செலுத்த 13.07.10–ல் கேட்பு பெறப்பட்டுள்ளது.

மேற்படி மின் இணைப்பு பதிவுக்கட்டணம், முன் வைப்புத் தொகை ரூ. 24,00,500/– செலுத்துவதற்கும் அதற்கான செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவழிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் வெள்ளியங்காடு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 110/22 KV மின் இணைப்பு பெறுவதற்கு முன்வைப்புத் தொகை மற்றும் பதிவுக்கட்டணத்திற்கு ஆகும் செலவினம் ரூ. 24,00,500/–ஐ (ரூபாய் இருபத்திநான்கு இலட்சத்து ஐநூறு மட்டும்) மின்சார வாரியத்திற்கு மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலுத்துவதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 4612 /08 / JN5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 99 நாள் 03.09.10**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

கோவை மாநகராட்சியில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 377.13 கோடி மதிப்பில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இத்திட்டத்தில் மாநகராட்சி பகுதியினை எட்டு (8) மண்டலங்களாக பிரித்து, அம்மண்டலங்களில் பெறப்படும் கழிவு நீரினை, தற்போது அமைக்கப்பட்டு வரும் இரு சுத்திகரிப்பு நிலையங்களான உக்கடம், நஞ்சுண்டாபுரம் மற்றும் ஒண்டிப்புதூர் பகுதியில் அமைக்கப்படவுள்ள சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு செய்ய திட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எட்டு (8) மண்டலங்களிலிருந்து அதிகபட்சமாக கிடைக்கப்பெறும் மொத்த கொள்ளளவான 170 எம்.எல்.டி கழிவு நீரினை மூன்று கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களால் சுத்திகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படும் கழிவு நீரினை தனியாருக்கு குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கோ அல்லது விவசாய பணிக்கோ விற்கலாமெனவும், அதனால் மாநகராட்சிக்கு வருவாய் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படும் கழிவு நீரின் தன்மை குறித்து விளக்கப்பட்டும், குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கு உபயோகிக்க தேவைப்படுபவர் குறித்து விபரமறிய நாளிதழ்களில் விளம்பரப்படுத்தப்பட்டு, விளக்கக் கூட்டம் வாயிலாக கருத்துக் கேட்கப்பட்டதில் தற்போதைக்கு சுமார் 20 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்பட்ட நீரினை, மாமன்றம் நிர்ணயிக்கும் விலை விகிதத்திற்கு பிற பயன்பாட்டிற்கு தாங்கள் எடுத்து பயன்படுத்த கீழ்கண்ட நிறுவனங்கள் இசைவு தெரிவித்து முன்வந்தனர்.

1. திரு. ரேக்இண்டோ கோவை டவுன்ஷிப் லிமிடெட்,
   பச்சாபாளையம் கிராமம், பேரூர், கோவை –641 010. – 4 எம்.எல்.டி
2. திரு. ஷாரதா டெரி புராடக்ட்ஸ் லிமிடெட்,
   நெல்லிதுறை, மேட்டுப்பாளையம் – 641 305. – 10 எம்.எல்.டி
3. திரு. தி கோயம்புத்தூர் கோல்ப் கிளப், – 4 எம்.எல்.டி
   செட்டிபாளையம் – 641 201.
4. திரு. லார்சன் & டப்ரோ லிமிடெட்,
   மலுமிச்சம்பட்டி, கோவை – 641 021. – 1 எம்.எல்.டி
5. அரசு போக்குவரத்து கழகம், கோவை – 0.2 எம்.எல்.டி

எனவே, கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்படும் மூன்று சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்தோ, சுத்திகரிக்கப்பட்ட பின்னர் பம்பிங் மூலம் வெள்ளலூர் உரகிடங்கு பகுதியில் பழைய பாதாள சாக்கடை திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நான்கு எண்ணிக்கையிலான கழிவு நீர் குட்டையிலிருந்தோ (lagoon) சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை எடுத்துக்கொள்ள முன்வந்துள்ள மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனங்களுடன், சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் தேவையுள்ள கூடுதல் நிறுவனங்களோ மற்றும் தனியார் துறைகளோ, ஒருங்கிணைந்தோ அல்லது தனியாகவோ மாமன்றம் நிர்ணயிக்கும் விலையில் தமது சொந்த பொறுப்பில் எடுத்துப் பயன்படுத்த உரிய துணை விதிகள் (Bye-law) தயாரித்து அரசின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

இது குறித்து மாமன்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டதில் மேற்படி குழுவும் தனது தீர்மானம் எண். 39, நாள்: 17.08.2010-ல் உபவிதிகள் தயாரித்து, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை விற்பனை செய்யலாமென இசைவு தெரிவித்துள்ளதின் பேரில் தயாரிக்கப்பட்ட உப விதிகளுக்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்க பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) சென்னை மாநகராட்சியில் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தால் சுத்திகரிக்கப்படும் கழிவு நீரினை, தேவைப்படும் நிறுவனங்களுக்கு தற்போது 1000 லிட்டருக்கு ரூ. 10.20 என்ற விலை விகிதத்தில் விற்பனை செய்து வருகிறது. கோவை மாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள மற்றும் அமைக்கப்படவுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து சுத்திகரிக்கப்படும் கழிவு நீரினை ரூ. 10.00/1000 லிட்டர் என்ற அடிப்படையில் மாமன்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண். 39, நாள் : 17.08.2010-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

ஆ) சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை, விற்பனை செய்ய தயாரிக்கப்பட்ட துணை விதிகளுக்கு (Bye-law) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க. எண். 14353/09/ஜே.ன்.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 100 நாள் 03.09.10**

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள் - கோயம்புத்தூா் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினா் மூலம் 01.04.2010 முதல் 31.03.2011 முடிய ஓராண்டு காலத்திற்கு தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் டெக்ஸ்கோ ஓட்டுநா்களுக்கு திருத்தி அமைக்கப்பட்ட அகவிலைப்படி உயா்வு வழங்குதல் - தொடா்பாக.

----------

கோயம்புத்தூா் மாநகராட்சிக்கு டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் 01.04.2010 முதல் 31.03.2011 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநா்களை தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. தினக்கூலி அடிப்படையில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநா்களை நபா் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ. 6,796/-ம், அதற்கான சேவைக் கட்டணம் 12%, அதற்குரிய சேவைவரி 10.3%, (கல்வி வரிக்கட்டணம் 10% உட்பட) வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை எண். 511 பொது (முன்னாள் படை வீரா்) துறை, நாள் 10.06.2010ன்படி, திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி உயா்வு டெக்ஸ்கோ ஓட்டுநா்களுக்கு வழங்கலாம். இந்த அதிகப்படியான அகவிலைப்படி 01.01.2010 முதல் பணப்பயனுடன் நடைமுறைக்கு வரும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாடு டெக்ஸ்கோ ஓட்டுநா்களுக்கு திருத்திய ஊதியம் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 7480/2010/எம்சி 7

### மாநகர மன்ற தீா்மானம் எண் 101 நாள் 03.09.10

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி